அறிக்கை அளிக்கக்கூடியது

இந்திய உச்சநீதிமன்றம்

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு

குற்றவியல் மேல்முறையீடு எண் 312/2018

(சிறப்பு அனுமதி மனு (கு) எண் 6900/2014-இலிருந்து எழுகிறது)

இராஜேந்திர இரஜோரியா .....மேல்முறையீட்டாளர்(கள்)

எதிர்

ஜகத் நரேன் தபாக் மற்றும் ஒருவர் ..... **எதிர்மேல்முறையீட்டாளர்கள்**

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. என். வி. இரமணா:

1. **அனுமதி வழங்கப்பட்டது**.

2. இக்குற்றவியல் மேல்முறையீட்டில், குற்றவியல் சீராய்வு எண் 104/2013-இல் மத்தியப் பிரதேச உயர் நீதிமன்ற குவாலியர் நீதியராயத்தால் பிறப்பிக்கப்பட்ட 08.07.2014-ஆம் தேதியிடப்பட்ட தீர்ப்புரையானது மறுத்துரைக்கப்படுகிறது.

3. **இங்குள்ள மேல்முறையீட்டாளர், சட்ட ஆள்வரை யுடைய காவல் நிலையம் முன்பு திருமதி வித்யாபாய் என்பவரும், வேறு சிலரும் 1-ஆவது எதிர்மேல்முறை யீட்டாளரிடம் பிரச்சனைக்குரிய நிலத்தை விற்றுவிட்டு, மோசடி மற்றும் பொய் ஆவணம் புனைந்ததன்மூலம் மேல்முறையீட்டாளரின் சொத்தினை உடைமை மாற்றிவிட்டனர் என்ற குற்றச்சாட்டுகளின்பேரில், இந்திய தண்டனைச் சட்டம்,** 1860 (**இதில் இதற்குப்பிறகு சுருக்கமாக ' இ.த.ச. ' எனக் குறிப்பிடப்படும்) -இன் பிரிவுகள்** 420, 467, 468, 471, 120-**பி,** 506-**இன் ' கீழும் மற்றும் பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம்,** 1989, **பிரிவு** 3-**இன் கீழும் புகார் ஒன்றைத் தாக்கல் செய்தார்.**

மேலும் எதிர்மேல்முறையீட்டாளர்கள், மேல்முறையீட்டாளரை கொடிய பின்விளைவுகள் நேரிடும் என மிரட்டியும், அவருடைய சாதி/பழங்குடியினத்தைச் சிறுமைப்படுத்த எண்ணி, ஆபாசமான வார்த்தைகளால் அவர்களிடம் சூளுரைத்தனர் என்றும் சாட்டுரைக்கப்பட்டது.தொடர்புடைய காவல் நிலையமானது, மேற்கூறிய குற்ற முறையீட்டின்மீது ஏதொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பதைக் குறிப்பிடலாம்.

4.காவல்துறையினரின் செயலற்றத்தன்மையால் மனக்குறையுற்று, மேல்முறையீட்டாளர், கு.வி.மு.ச.வின் பிரிவு 200-இன் கீழ் ஒரே பொருண்மைத் தொகுதியுடன், குவாலியர் சட்ட ஆள்வரையுடைய நீதித்துறை நடுவரை அணுகினார்.

5.மேல்முறையீட்டாளர்/புகார் தாரர், தான் பட்டியல் வகுப்பினர் அல்லது பட்டியல் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவர் என்றும், தரப்பினர்களிடையேயான பிரச்சனையானது உரிமையியல் தன்மைவாய்ந்த சூழ்ச்சிமுறைகளைக் கொண்டது என்றும் மெய்ப்பிக்க மேல்முறையீட்டாளர்/புகார்தாரரால் அளிக்கப்பட்ட பதிவாவணத்தில் போதுமான ஆதாரங்கள் இல்லை என்ற அடிப்படையில் மேற்சொன்ன குற்றமுறையீட்டை, 21.04.2012-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின்மூலம் குவாலியர் முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் தள்ளுபடி செய்தார்.6. மேற்கூறப்பட்ட குற்றமுறையீட்டின் தள்ளுபடியால் மனக்குறையுற்று, மேல்முறையீட்டாளர் குற்றவியல் சீராய்வு எண் 242/2012-இல் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (இதில் இதற்குப்பிறகு சுருக்கமாக ' அமர்வு நீதிமன்றம் ' எனக் குறிப்பிடப்படும்) அவர்களை அணுகினார்.அமர்வு நீதிமன்றம் 07.12.2012-ஆம் தேதியிட்ட உத்தரவின்மூலம் புகார்தாரர், பட்டியல் சாதியான ஜாதவ் சமுதாயத்தைச் சார்ந்தவர் என்று தீர்மானித்தது. மேலும், 1-ஆவது எதிர்மேல்முறையீட்டாளர் ற்றவர்களுடன் சேர்ந்து கூட்டுச்சதி புரிந்து, மேல்முறையீட்டாளருக்குச் சொந்தமான நிலத்தை சட்டத்திற்கு முரணான முறையில் மாற்றிவிட்டார் என்று விவரிக்கப்பட்ட பொருண்மைகள்

விளக்குகின்றன என்று அமர்வு நீதிமன்றம் கருத்துரைத்தது. அதன்பிறகு, கீழமை நீதிமன்றம் பொருண்மைகளையும், மேலும், சட்டத்தையும் சரியானமுறையில் மதிப்பிடவில்லை என்று முடிவு செய்து, பின்வரும் முறையில் வழக்கைத் திருப்பியனுப்பியது:

> இச்சீராய்வு அனுமதிக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட 21.04.2012-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவானது நீக்கறவு செய்யப்பட்டு, **மேல் விசாரணைக்குப் பிறகு, தேவைப்பட்டால், இந்த உத்தரவில் கொடுக்கப்பட்ட காண்முடிவுகளைக் கருத்திற்கொண்டு, குற்றமுறையீட்டைப் பதிவது குறித்து உரிய உத்தரவு பிறப்பிக்கப்படவும், எதிர்மேல் முறையீட்டாளர்களுக்கு அழைப்பாணை விடுக்கவும், அதற்காக 20.12.2012 அன்று கீழமை நீதிமன்றத்தின் முன்பு தரப்பினர்கள் ஆஜராக பணிக்கும் ஓர் உத்தரவு டன் வழக்கு திருப்பியனுப்பப்பட்டுள்ளது.**
>
> **(முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது)**

7.வழக்கைத் திருப்பியனுப்பியதன்பேரில், 23.01.2013-ஆம் தேதியிட்ட உத்தரவுமூலம் நீதித்துறை நடுவரானவர், இ.த.ச., பிரிவுகள் 420, 467, 471, 120- ஆ மற்றும் ப.வ./ப.ப. சட்டத்தின் பிரிவு 3 (1) (4) -இன் கீழ் மேற்கூறப்பட்ட குற்றங்களை விசாரணைக்கு எடுக்கும்போது, குற்றவியல் வழக்கு எண் 1576/2013-ஆக குற்றமுறையீட்டைப் பதிவு செய்தார் மற்றும் 23.02.2013 அன்று கற்றறிந்த நடுவர் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளதாவது-

> .....நீதிமன்றமானது, நடவடி க்கை தொடங்குதல் என்ற கேள்வி எழுகிறதா?, இல்லையா? என்பதை முதன்மையாக முடிவெடுக்க வேண்டியதாகிறது. **இந்த வழக்கில் கற்றறிந்த சீராய்வு நீதிமன்றமானது, விண்ணப்பதாரரல்லாதவர்களுக்கு எதிராக நடவடிக்கை தொடங்குவதற்கு போதுமான காரணத்தை முதல்நோக்கில் ஏற்கெனவே கண்டறிந்துள்ளது என்பது ஏற்புடையதாகும்.**
>
> **(முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது)**

8. இதற்கிடையில், அமர்வு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட 07.12.2012-ஆம் தேதியிடப்பட்ட மீட்டனுப்புகை உத்தரவாலும் மற்றும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் 23.01.2013-ஆம் தேதியிடப்பட்ட நடுவரின் உத்தரவாலும் மனக்குறையுற்று, எதிர்மேல் முறையீட்டாளர் உயர் நீதிமன்றம் முன்பு குற்றவியல் சீராய்வு எண் 104/2013 என்ற சீராய்வைத் தாக்கல் செய்தார். 08.07.2014-ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான உத்தரவின்மூலம் உயர் நீதிமன்றம் சீராய்வு மனுவை அனுமதித்து, சீராய்வு நீதிமன்றமானது, 23.01.2013 அன்று குற்றமுறையீட்டை விசாரணைக்கு எடுத்துக் கொண்டிருக்கக்கூடாது, ஏனென்றால், அது கு.வி.மு.ச., பிரிவு 398- ஐ மீறுதலாகும் என்ற காரணத்தின்பேரில் அதை செல்லத்தகாததாக்கியது.

9. **இரு தரப்பினர்களின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர்களின் வாதங்களை நாங்கள் கேட்டோம்.**

10. **பரிசீலனைக்காக வருகின்ற கேள்விகள் யாதெனில், அமர்வு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட மீட்டனுப்புகை உத்தரவின் சட்டமுறைமையையும், அதன்பிறகு, கற்றறிந்த நடுவரின் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் உத்தரவையும் குறித்ததாகும்.உயர் நீதிமன்றம் இரு உத்தரவுகளின் செல்லுந்தன்மையை விவாதித்துள்ளதால், நாங்கள் மீட்டனுப்புகை உத்தரவின் சட்டமுறைமையுடன் துவங்கி, அவற்றை வரிசை முறைப்படி எடுக்க விரும்புகிறோம்.**

11. **கற்றறிந்த அமர்வு நீதிபதி தகுதிப்பாட்டின் அடிப்படையில் கருத்தறிவித்திருக்கக்கூடாது, ஏனெனில், அது, வழக்கின் விசாரணையை எடுத்துக்கொள்வதற்கு நிகரானதாகும் என எதிர் மேல்முறையீட்டாளர் வாதிட்டார்.அத்தகைய வாதுரைகள் ஈர்க்கக்கூடியதாகத் தோன்றினாலும், சீராய்வு நீதிமன்றந்தான் கு.வி.மு.ச., பிரிவு 398-இன் கீழ் மேல்விசாரணை உத்தரவிற்கான காரணங்களை அளித்திருந்தது என்ற காரணத்திற்காக அவை நிராகரிக்கப்படவேண்டும் மற்றும் தகுதிப்பாட்டின் அடிப்படையில்**

வழங்கப்பட்ட கருத்தறிவிப்புகள் இவ்வழக்கின் விசாரணையை எடுத்துக்கொள்ளுமொரு விளைவைப் பெற்றிருப்பதாகக் கூறமுடியாது.

12. **ஆரம்பத்திலேயே நாம் மீட்டனுப்புகை உத்தரவின் சட்டமுறைமையைத் தீர்வுகாண்பதற்கு முன்பு, கு.வி.மு.ச., பிரிவு** 392 **உடனிணைந்த பிரிவு** 398- **இன் கீழான குற்றவியல் சீராய்வின் நோக்கெல்லையை நாங்கள் தீர்மானிக்கவேண்டியதாகிறது. இங்கு, கு.வி.மு.ச., பிரிவுகள்** 397 **மற்றும்** 398- **ஐ எடுத்தியம்புவது பொருத்தமானதாகும்.**

> **பிரிவு 397. சீராய்வு அதிகாரங்களைச் செலுத்துவதற்காக பதிவாவணங்களை அனுப்பக் கோருதல்.**
>
> (1) உயர் நீதிமன்றம் அல்லது அமர்வு நீதிபதி எவரும், தத்தமது வட்டார அதிகார வரம்புக்குள் அமைந்துள்ள கீழமை குற்றவியல் நீதிமன்றம் எதனின் முன்பான நடவடிக்கை ஏதும், பதிவு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட காண்முடிவு, தண்டனை அல்லது கட்டளையின் சீர்மை, சட்டச்சீலம் அல்லது பொருத்தமுடைமை குறித்தும், அக்கீழமை நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் எதிலும் சட்டமுறைமையைக் குறித்தும் தாம் மனநிறைவு கொள்ளும் பொருட்டும், அந்த நடவடிக்கையின் பதிவாவணங்களை அனுப்பும்படி கோருவதைப் பரிசீலனை செய்யலாம் மற்றும் அப்பதிவாவணத்தை அனுப்பு மாறு கோரும்போது தண்டனை அல்லது கட்டளை எதனையும் நிறைவேற்றுவதை நிறுத்தி வைத்து, எதிரி சிறையில் அடைக்கப் பட்டிருப்பாரானால், அப்பதிவாவணத்தின் பரிசீலனை நிலுவையில் இருக்கையில், பிணையத்தின்பேரிலோ, அவரது சொந்த பிணைமுறியின்பேரிலோ அவர் விடுவிக்கப்பட வேண்டுமென்றும் உத்தரவிடலாம்.
>
> விளக்கம்- செயலாட்சித்துறை நடுவர் களாயினும் அல்லது நீதித்துறை நடுவர் களாயினும், நடுவர்கள் யாவரும் அசல் அல்லது மேல்முறையீட்டு அதிகாரவரம்பு செலுத்துவதாயிருப்பினும், இந்த உட்பிரிவு மற்றும் 398- ஆவது பிரிவின் பொருட்டு அமர்வ நீதிபதிக்கு கீழ்நிலையில் உள்ளவர்களாகக் கருதப்படுதல்வேண்டும்.

பிரிவு 398. விசாரணை செய்ய கட்டளை யிடுவதற்குள்ள அதிகாரம்.

397-ஆவது பிரிவின்படியோ, வேறு விதமாகவோ பதிவாவணம் எதையேனும் பரிசீலனை செய்ததின்பேரில், 203-ஆவது பிரிவின்படி அல்லது 204-ஆவது பிரிவின் (4) -ஆவது உட்பிரிவின்படி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்ற முறையீடு எதுவும் அல்லது குற்றஞ்சுமத்தப்பட்டு, விட்டு-விடப்பட்டுள்ள எவர் மீதுமுள்ள வழக்கைப் பரிசீலனை செய்யுமாறு, தலைமை நீதித்துறை நடுவரையோ, அவருக்கு கீழமைந்த நடுவர்களில் எவரையேனுமோ, உயர் நீதிமன்றம் அல்லது அமர்வு நீதிபதி உத்தரவிடலாம் மற்றும் நடுவர் தாமே அவ்வாறே செய்யலாம் அல்லது தமக்கு கீழமைந்த நடுவர் எவரையேனும் அவ்வாறு செய்யுமாறு உத்தரவிடலாம்:

இருப்பினும், விட்டுவிடப்பட்டுள்ள ஒருவரின் வழக்கைப் பரிசீலனை செய்வதற்காக, இந்தப் பிரிவின்படி உத்தரவு ஏன் பிறப்பிக்கக்கூடாது என்பதற்கு காரணங் காட்டுவதற்கு அத்தகையவருக்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய உத்தரவு எதையும் நீதிமன்றம் பிறப்பித்தலாகாது.

சீராய்வு அதிகாரமானது, அமர்வு நீதிமன்றத்தாலோ அல்லது உயர் நீதிமன்றத்தாலோ செயலுறுத்தப்பட்டு, கு.வி.மு.ச., பிரிவு 203-இன் கீழ் நடுவரால் தள்ளுபடி செய்யப்பட்ட குற்றமுறையீடானது, கு.வி.மு.ச., பிரிவு 397-இன் கீழ் குற்றவில் சீராய்வு ஒன்றில் எதிர்க்கப்படலாம் என்பது மேற்கூறப்பட்ட வகைமுறைகளைப் பார்வையிடுவதிலிருந்து தெரிகிறது. சீராய்வு அதிகாரவரம்பின் சுற்றெல்லை நன்கு தீர்வுகாணப்பட்டுள்ளது. கு.வி.மு.ச., பிரிவு 397-ஆனது, அமர்வு நீதிபதி தம் அதிகாரவரம்புக்குள் அமைந்துள்ள கீழமை குற்றவியல் நீதிமன்றம் முன்பான நடவடிக்கை எதிலும், பதிவு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட காண்முடிவு, தண்டனை அல்லது கட்டளையின் சீர்மை, சட்டச் சீலம் அல்லது பொருத்தமுடைமை குறித்தும், அக்கீழமை நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் எவற்றின் முறைமையைக் குறித்தும் தாம் மனநிறைவு கொள்ளும் பொருட்டு பதிவாவணத்தை பரிசீலனை செய்வதற்கு அவற்றை அனுப்பும்படி கோர அமர்வு நீதிபதிக்கு அதிகாரமளிக்கிறது.

13. சீராய்வு அதிகாரங்களின் மதிப்பீடானது, கு.வி.மு.ச., பிரிவு 399 உடனிணைந்த பிரிவு 401-இன் கீழ் மற்றவற்றுக்கிடையில் வகைசெய்யப்பட்டுள்ளது.அமர்வு நீதிமன்றம் முன்பு தாக்கல் செய்யப்பட்ட சீராய்வு மனுக்களுக்கு சரிசமமாக பொருந்தத்தக்க மற்ற பிரிவு களுடன் சேர்த்து பிரிவு 398 வா சிக்கப்பட வேண்டும் என்பது மேற்கூறப்பட்ட வகைமுறைகளிலிருந்து தெளிவாகிறது. பிரிவு 398 மேல்விசாரணைக்கு உத்தரவிடும் ஒரு தனித்தன்மை வாய்ந்த அதிகாரத்தை மட்டுமே விவாதிக்கிறது, அதேவேளையில், பிரிவு 397 உடனிணைந்த பிரிவு 399 மற்றும் பிரிவு 401 காண்முடிவுகள், தண்டனை அல்லது கட்டளையின் சீர்மை, சட்டச்சீலம் அல்லது பொருத்தமுடைமை எவற்றையும் ஆராய்வதற்கு சீராய்வு அதிகார அமைப்பிற்கு அதிகாரமளிக்கிறது.சீராய்வு நீதிமன்றத்தின் அதிகாரங்கள், கு.வி.மு.ச., பிரிவுகள் 398, 399 மற்றும் 401 ஆகியவற்றுக்கிணங்க ஒட்டு மொத்தமாகப் புரிந்துகொள்ளப்படவேண்டும்.

14.**உயர் நீதிமன்றமானது, எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையில், அமர்வு நீதிமன்றமே வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டது என்றதொரு தவறான முடிவுக்கு வந்தது என நாங்கள் குறிப்பிடலாம், அது கீழ்க்கண்டவாறு மீண்டும் எடுத்துரைக்கப்படலாம்.**

> எதிர்ப்புக்குள்ளான உத்தரவானது, சட்டப்பிரிவு 398-இன் கீழ் பிறப்பிக்கப்பட இயலாது என்பது இவ்வகையத்தின் சாதாரண பார்வையிலிருந்து தெளிவாகிறது. உத்தரவிடலாம் ' என்ற வார்த்தை இவ்வகையத்தில் சட்டமன்றத்தால் பயன் படுத்தப்பட்டுள்ளது.இது, மேல்விசாரணை உத்தரவு பிறப்பிக்க நீதிமன்றத்திற்கு பரந்த விருப்புரிமையை அளிக்கிறது.
>
> **ஒரு முதல்நோக்கு வழக்கைக் கண்டறிந்ததன்பேரில்,குற்றமுறையீட்டை மேல்நடத்துவதற்கான காரணமிருந்தாலும், இல்லையென்றாலும் குற்றத்தின் விசாரணையை எடுத்துக்கொண்டு, குற்றத்தை மதிப்பிட்டு, முடிவினை டைவதற்கும், மேலும், குற்றமுறையீடு ஒன்றைப் பதிவு செய்வதன் தொடர்பாக நடுவர் ஒருவரை பணிக்கவும் அமர்வு நீதிமன்றம் அதிகாரம் பெற்றிருக்கவில்லை. "**

15. **மேலே மேற்கோள்காட்டப்பட்ட அமர்வு நீதிமன்றத் தீர்ப்புரையைப் பார்வையிட்டதன்பேரில், அமர்வு நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் உத்தரவொன்றைப் பிறப்பிக்கவில்லை என்பது எங்களுடைய கருத்தாகும். அமர்வு நீதிமன்றத்தால் வைக்கப்பட்ட கருத்துரைகள் மீட்டனுப்புகைக்கான நியாயப்படுத்துதல் மட்டுமேயாகும் மற்றும் அவை விசாரணைக்கு எடுத்துக்கொண்டதாக ஆகாது.** மேற்படியானவற்றைக் கருத்திற்கொண்டு, உயர் நீதிமன்றமானது, அமர்வு நீதிமன்ற உத்தரவை தவறாகப் பொருள்கொண்டு, தவறானதொரு அடிப்படையில் செயல்பட்டதென தெளிவாகிறது.அவ்வாறின்றி மீட்டனுப்புகை வழக்கைப் பரிசீலிக்கையில், அமர்வு நீதிமன்றத்தின் காண்முடிவுகளைக் கவனத்திற்கொள்ள, நடுவர் நீதிமன்றத்தின் மீது ஆதிக்கஞ்செலுத்தும் அளவிற்கு சீராய்வு நீதிமன்றமும் தவறிழைத்துள்ளது. மீட்டனுப்புகை உத்தரவானது மேல்விசாரணை நடத்துவதற்கு விசாரணை நீதிமன்றத்திற்கான விருப்புரிமையையும், அதன் பின்பு நீதிமுறை கட்டளை வழங்கி பரிசீலிக்கவும் வகைசெய்கிறது என்ற பொருண்மை காரணமாக உயர் நீதிமன்றம் முன்பு தவறான கருத்தை உருவாக்கியது. கையிலிருக்கும் வழக்கில் உயர் நீதிமன்றமானது, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல் மற்றும் அழைப்பாணை வழங்குதல் என்பவற்றுக்கிடையேயான இரு பிரிவு முறையை மதிப்பிடாமல் சட்டத்தைத் தவறாகப் பொருள்கொண்டு குற்றமுறையீட்டையே செல்லுபடியற்றதாக்கியது. மேற்படியானவற்றின் துணைகொண்டு பார்க்கையில், உயர் நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான உத்தரவு சட்டத்தின் பார்வையில் நிலைநிறுத்தப்பட இயலாது.

16. **வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் கற்றறிந்த நடுவரின் உத்தரவின் சட்டமுறைமையை குறித்த இரண்டாவது அம்சத்திற்கு தற்போது வருவோம்.**விசாரணைக்கு எடுத்துக்கொள்கையில் நடுவரால் கோரப்படும் நிலைப்பாடு, தொடர் தீர்ப்புரைகளில் இந்த நீதிமன்றத்தால் நன்கு தீர்வு காணப்பட்டுள்ளது. **சுப்பிரமணிய சுவாமி -எதிர்-மன்மோகன் சிங்** மற்றும் ஒருவர், (2012) 3 எஸ்.சி.சி. 64:(ஏ.ஐ.ஆர்.2012 எஸ்.சி. 1185) என்ற வழக்கில்

இந்நீதிமன்றம் 'செயலாட்சிவரம்பு' என்ற சொல்லின் பொருளை விளக்கி, "சட்ட மொழிப்பாங்கில், செயலாட்சிவரம்பு என்பது அதிகாரவரம்பு கொண்டிருக்கும் நீதிமன்றத்தால், அதன்முன் வைக்கப்பட்ட ஒரு காரணம் அல்லது விடயத்தின்பேரில் நடவடிக்கைகளைத் துவக்கி, அக்காரணத்தையோ அல்லது விடயத்தையோ நீதிமுறையில் தீர்வு செய்வதற்கான அடிப்படை ஏதேனும் இருக்கிறதா?எனத் தீர்மானிக்கும்பொருட்டு, நீதிய அறிவிப்பை ஏற்றுக்கொள்வதாகும் எனத் தீர்மானித்துள்ளது. நடுவர், விசாரணையை எடுத்துக்கொள்ளும்வேளையில், குற்றமுறையீட்டை மேல்நடத்துவதற்கு திருப்திகரமான காரணங்களைக் குறித்து தாமே திருப்தியடையவேண்டும் மற்றும் இந்நிலையில் குற்றத்தின் தீர்ப்புக்கு போதுமான அடிப்படை உள்ளதா?என்பதைப் பரிசீலிக்கக்கூடாது என நாங்கள் குறிப்பிடலாம். விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும்நிலையில் நடுவர் விரிவான காரணங்களைப் பதிவு செய்யத் தேவையில்லை, ஆனால் நடுவரால் தனக்கு முன்பாக வைக்கப்பட்ட ஆவணங்களில், தற்சார்பற்ற சிந்தையைச் செலுத்தியமையை உத்தரவானது பிரதிபலிக்கவேண்டும் என்பதைக் குறிப்பிடும் சூழலுக்கு வாய்ப்பின்றி போகலாம்.

17. **விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் கற்றறிந்த நடுவரின் உத்தரவைப் பார்வையிட்டதன்பேரில், அமர்வு நீதிமன்றமானது ஏற்கெனவே முதல்நோக்கு வழக்கொன்றை நடத்தியுள்ளது எனக் கற்றறிந்த நடுவர் கருத்தறிவித்துள்ளார் என்பது தெளிவாகிறது**. வழக்கை மீட்டனுப்புதலை நிறைவேற்றும்பொருட்டு ஒரு சில அம்சங்களை சீராய்வு நீதிமன்றமே கருத்தறிவித்துள்ளதால் அத்தகைய காண்முடிவை நிலைநிறுத்துவது கடினமாகும். நடுவர், விசாரணைக்கு எடுத்துக் கொள்கையில், தன்னுடைய தற்சார்பற்ற சிந்தையைச் செலுத்த திர்பார்க்கப்படுவதால், அவரால் அத்தகைய கருத்தறிவிப்புகள் பிறப்பித்திருக்கப்படக்கூடாது. கையிலுள்ள வழக்கில், விசாரணைக்கு எடுத்துக் கொள்கையில், நடுவரின் உள்ளார்ந்த மனநிறைவை மறு ஆய்வு செய்யும் மேல்முறையீட்டு மன்றம் மீதான வரையறையை நாங்கள் அங்கீகரிக்கிறோம். ஆனால் அத்தகைய தற்சார்பற்ற மனநிறைவானது உத்தரவில் பிரதிபலிக்கவில்லையெனில், அதனை நிலைநிறுத்தச் செய்வது கடினமாக

இருக்கும்.நீதி வழங்கப்படுவதோடன்றி அது, வெளிப்படையாகவும், ஐயமின்றியும் வழங்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்த வேண்டும்.உரிமைகள், நலன்கள் மற்றும் சட்டரீதியான எதிர்பார்ப்புகளைப் பாதிக்கின்ற தீர்முடிவுகளைச் செய்கையில் நடைமுறைசார்ந்த நேர்மைநெறியின் படியான வகையில், முரண்பாடான சட்ட உட்கருத்தினை வெளிப்படையாக தெளிவாக்குவதற்குட்பட்டே, நம்முடைய குற்றவியல் நீதி அமைப்பின் கீழ் நிலைமுறையான நேர்மைநெறியோடு நடைமுறைசார்ந்த நேர்மைநெறியென இரண்டையும் நாம் உள்ளீர்த்துக் கொண்டிருக்கிறோம் என்பது நம்முடைய அரசியலமைப்பு மரபில் உருப்பெற்றுள்ளது.

18. **ஒரு வேறுபட்ட குறிப்பில், இந்தியா முழுவதிலுமுள்ள நடுவர்கள், இது தொடர்பாக தங்களுடைய கூர்மதி சிந்தையைப் பயன்படுத்துகையில், அதிகபட்ச எச்சரிக்கையை செயலுறுத்துவதற்கு இந்நீதிமன்றத்தின் திடமான முன்தீர்ப்பு நெறிகளால் பலசந்தர்ப்பங்களில் வழிநடத்தப்பட்டுள்ளனர் என்பதை நாங்கள் குறிப்பிடலாம்.துரதிருஷ்டவசமாக, எங்கள்முன் கொண்டுவரப்பட்ட பல வழக்குகள் வேறுவகையாகப் பிரதிபலிக்கின்றன என்பதை நாங்கள் குறிப்பிடலாம்.**

19. **ஓர் உரிமையியல் நீதிமன்றம், திருமதி வித்யா பாய் மற்றும் சில நபர்களால், ஜகத் நரேன் தபாக்கின் சார்பாக எழுதிக்கொடுக்கப்பட்ட விற்பனை பத்திரம் முற்றிலும் செல்லாததாக பின்னர் அறிவித்தது என்ற பொருண்மைக்கு எங்களது கவனம் ஈர்க்கப்பட்டது.மேலும், வழக்கின் தகுதிப்பாட்டின் அடிப்படையில் அமர்வு நீதிமன்றத்தால் செய்யப்பட்ட கருத்தறிவிப்புகளை நாங்கள் அறிவிக்கின்றோம். ஆனால் நாங்கள் அப்பிரச்சினைக்குள் செல்ல விரும்பவில்லை.**

20. **மேற்கூறப்பட்ட கருத்தின்படி, மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டு, எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை நீக்கறவு செய்யப்படுகிறது.அதன்படி, குற்ற முறையீடு விசாரணை நீதிமன்றத்தால் புதிதாகப் பரிசீலிக்கப்படவேண்டும்.இவ்வழக்கிலிருந்து விடைபெறும் முன், இந்த நடைமுறையிலுள்ள மேல்முறையீட்டைத் தீர்வுகாணும்பொருட்டு இந்நீதிமன்றத்தால் செய்யப்பட்ட கருத்தறிவிப்புகள் எவற்றாலும் ஆதிக்கஞ்செலுத்தப்படாமல், வழக்கினை மேல்நடத்த விசாரணை நீதிமன்றம் பணிக்கப்படுகிறது என்பதை நாங்கள் தெளிவு படுத்துகிறோம்.**

மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

மாண்புமிகு நீதியரசர் திரு. என்.வி. இரமணா

மாண்புமிகு நீதியரசர் திரு. எஸ். அப்துல் நசீர்

புதுதில்லி,

23.02.2018.

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."